**ஹொரொவபொத்தான பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 29 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஜூன் 08 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஜூன் 24 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஹொரொவபொத்தான பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 15 பேர்ச்சஸ் மற்றும் 10 பேர்ச் அளவிலான 02 காணிகளில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 6,000,000 தொகை பெறுமதியான 03 நீர் செயற்திட்டங்களின் நிலையான சொத்துக்களுக்காக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புறநெகும செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த ரூபா 40,276,055 தொகை பெறுமதியான கட்டிடங்களின் நிலையான சொத்துக்களுக்காக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான அலுவலக கட்டிடங்கள், கடைகள், வியாபார கடைத் தொகுதிகள், பொது மலசலகூடங்கள் முறைமை, நூலக கட்டிடங்கள் மற்றும் கட்டிடங்கள் அமைந்துள்ள பிரதேசங்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முடிவடைந்த ஆண்டின் போது சபையின் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 47,115 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,071,814 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 வீதவரி

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் செயலாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை செயற்படுத்தி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த ரூபா 157,731 தொகையான வீத வரி மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.2 வாடகை

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 154(1) இன் பிரகாரம் செயலாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை செயற்படுத்தி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த ரூபா 1,373,330 ஆன கடை வாடகை மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 1,038,750 தொகையான நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டண வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 ஏனைய வருமானம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159 ஆம் பிரிவின் (2) இன் பிரகாரம் பிரதேச சபையின் செயலாளருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை செயற்படுத்தி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 621,500 தொகையான நிலுவை கழிவுப்பொருள் வருமானத்தை மீளாய்வாண்டிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

03. செயற்பாட்டு மீளாய்வு

3.1 விளைவற்ற சொத்துக்கள்

ரூபா 1,064,000 பெறுமதியான அரிசிமாவுடன் அண்மித்த பேக்கரி உற்பத்தி உபகரணங்கள் மற்றும் கட்டிடங்கள் என்பன எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாமல் வருடக் கணக்காக விளைவற்றுக் காணப்பட்டன.

3.2 தாமதப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

2011 ஆம் ஆண்டின் தேசிய சவிய கிராமஎழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வேலை ஆரம்பிக்கப்பட்ட வாகல்கட தேசிய நீர் முன்மொழிவுத் திட்டத்திற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 3,544,028 தொகை செலவிடப்பட்டிருந்தது. நீர் முன்மொழிவுத் திட்டத்திற்குரிய நிர்மாணங்களின் பலவீனங்கள் காரணமாக 2016 ஏப்ரல் மாதம் வரையிலும் பிரதேசத்தின் மக்களுக்கு நீரை வழங்க முடியாதிருந்தது.

04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தல்